**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

O.S.No.13/2024

பிரதிவாதி தரப்பு சாட்சி பி.சா.1 ஐ 44/1969 பிரிவின்படி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 28.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பி.சா.1– தங்கராஜ், த/பெ. மாணிக்கம்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் ஆசிரியராக பணிபுரிந்தேன். நான் 16.10.2005 ல் ஓய்வு பெற்றேன். நான் ஓய்வு பெறும்போது எவ்வளவு சம்பளம் பெற்றேன் என்றால் அடிப்படை மற்றும் D.A. சேர்த்து ரூ.19,000/– பெற்றேன். ஓய்வு பணபலன்களாக ரூ.5,00,000/– பெற்றேன். நான் தற்போது ரூ.47,000/– பெட்சன் பெறுகிறேன். என் மனைவியும், மகள்களும், மகனும் சேர்ந்து குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.12/2000 வழக்கு தாக்கல் செய்தனர். அந்த வழக்கில் எங்களுக்குள் சமரசம் ஏற்பட்டது. அந்த வழக்கில் சமரசத்தினால் இந்த சொத்து மீது எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய வாழ்க்கை பொருளுதவி தொகையை மனுதாரர் வசூலிக்கும் பொருட்டு தாவா சொத்துகள் அனைத்தும் பொருட்பிணை கொடுப்பிணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என சமரச மனுவில் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அதன்படி தீர்ப்பானது.

2. மதுரை உயர் நீதிமன்றத்தில் வாதி, என் பெயரிலும், A.G. பெயரிலும் ரிட் மனு எண்.8039/2022 ல் தாக்கல் செய்தார். தாவா சொத்து பொருட்பிணை கொடுப்பிணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதை விற்க கூடாது என்றால் நான் விற்கவில்லை. என் மகன் பாலமுருகன் விற்றார். 30.04.2009 ம் தேதி நான் 2 ம் பிரதிவாதிக்கு பத்திரம் மூலமாக விற்றுள்ளேன் என்றால் இல்லை. கையெழுத்து போட்டேன். குளித்தலை நீதிமன்றத்தில் நாங்கள் எழுதி கொடுத்ததின் பேரில் தீர்ப்பானது. தீர்ப்பானது முதல் நான் என் மனைவிக்கு எவ்வித ஜீவனாம்சமும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். 2005 ம் ஆண்டு முடிய மாதம் மாதம் ரூ.2,000/– தொகையை என் மனைவிக்கும், எனது மகள்கள் மற்றும் மகனுக்கு கொடுத்தேன்.

3. மேற்படி ஜீவனாம்சம் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அலுவலகத்தில் உள்ளது. அ.வ.எண்.12/2000 வழக்கில் ஓய்வூதிய பணபலன்கள் ரூ.5,00,000/–ல் பாதியை என் மனைவிக்கும், எனது மகள்கள் மற்றும் மகனுக்கு கொடுக்க வேண்டும் என தீர்ப்பானது என்றால்

சரிதான். ஆனால் அதன்படி நான் பணம் கொடுக்கவில்லை என்றால் கொடுத்தேன். ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தமிழ்செல்வி, திலகவதி, சத்யா, இரத்தினசாமி ஆகிய நால்வரும் என் மனைவியும் சேர்த்து மொத்தம் 5 பேர் ஜீவனாம்ச வழக்கில் வாதிகள்.

4. தமிழ்செல்வி, திலகவதி, சத்யா, இரத்தினசாமி ஆகிய நால்வருக்கும் சில சொத்துகளை எழுதி வைத்தேன் என்றால் சரிதான். என் மனைவிக்கு சொத்து எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். எவ்வித ஜீவனாம்ச தொகையும் என் மனைவிக்கு இதுநாள் வரை நான் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். ஆவணம் அலுவலகத்தில் இருந்து வாங்கி வருகிறேன். வாதியும், நானும் தனித்தனியாக குடியிருக்கிறோம். வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் தெரியாது. நான் கையெழுத்து போட்டு வாங்கியுள்ளேன் என்றால் தெரியவில்லை. எனது எதிர்வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் பஞ்சாயத்தாரை கொண்டு நான் பேசியபோது, என் மனைவி நடவடிக்கை எடுக்க போவதில்லை என சொன்னார் என சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

5. 2ம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் இல்லை. ஒரே சமூகம். நான் என் மனைவிக்கு தெரியாமல் பொருட்பிணை கொடுப்பிணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாவா சொத்தை விற்றேன் என்றால் நான் விற்கவில்லை. என் மகன் பாலமுருகன் விற்றார். பாலமுருகன் சாட்சி கையெழுத்து தான் செய்துள்ளார் என்றும், நான் தான் கிரைய பத்திரத்தில் கிரையதாரராக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் பாலமுருகன் என்னை சாட்சியாக கையெழுத்து போடும்படி கேட்டார். நான் கையெழுத்து போட்டேன். எனது எதிர்வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் பாலமுருகன் கிரையம் செய்தார் என்றும், நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு விளங்கவில்லை. மேற்படி கேள்வியை திரும்ப கேட்டபோது, சொல்லியிருப்பேன் என சாட்சியமளிக்கிறார்.

6. எனது எதிர்வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் பாலமுருகன் கிரையம் செய்தார் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் நான் பணம் வாங்கவில்லை என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருப்பேன். எனது எதிர்வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் நான் பணம் வாங்கவில்லை என சொல்லவில்லை என்றால் சரியல்ல. வில்லங்கத்திற்கு உட்படுத்தப்பட்ட தாவா சொத்தை நான் விற்றது சட்டப்படி செல்லாது என்றால் நான் விற்கவில்லை. பாலமுருகனுக்கு சொத்து எழுதி

வைத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து என் பெயரில் இருந்தது. என் பெயரில் இருந்த சொத்தை பாலமுருகன் விற்றார். பாலமுருகனை 4–5 வருடங்களாக என் கைக்குள் வைத்து கொண்டு, அவரை ஏமாற்றி சொத்தை விற்றுள்ளேன் என்றால் நான் ஏமாற்றவில்லை.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M,Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.